II. QUESTIONS AND ANSWERS

STARRED QUESTIONS

Amendment to the Constitution of India

*1. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether it is a fact that the Government of Tamil Nadu have requested the Central Government to amend the Constitution of India in order to provide for representation to the States in Parliament on the basis of 1951 Census ;

(*b*) whether any reply has been received from the Government of India ; and

(*c*) the details thereof ?

இந்திய அரசியலமைப்புத் திட்டத்திற்குத் திருத்தம்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1951-ஆம் ஆண்டு மக்கட் தொகைக் கணக்கெடுப்பு அடிப்படையில் நாடாளுமன்றத்தில் மாநிலங்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கும்பொருட்டு, இந்திய அரசியலமைப்பைத் திருத்தியமைக்குமாறு மத்திய அரசைத் தமிழ் நாடு அரசு கேட்டுக் கொண்டதா ?

(இ) இந்திய அரசிடமிருந்து பதிலேதும் கிடைத்துள்ளதா ?

(உ) அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) வும் (இ) யும் : ஆம்.

(உ) மத்திய அரசு சம்மதிக்கவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர்அவர்களே, எந்தக் காரணத்தால் மத்திய அரசு சம்மதிக்கவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அவர்கள் கூறியுள்ள காரணங்கள் இரண்டு. (1) ஒரு மாநிலத்தில் மக்கட்தொகையில் அதிகரிப்புக்கும், குறைவுக்கும் முக்கிய காரணம் குடும்ப நலத் திட்டம்தான் என்னும் கருத்தை முழுவதும் ஏற்றுக்கொள்வதற்கில்லை ; மக்கள் இடம் பெயர்தல் போன்ற பல்வேறு கூறுகளினாலும் அதிகரிப்பு ஏற்படலாம். (2) இத்திட்டத்தை அப்படியே ஏற்றுக்கொள்வதாயின், மற்ற மாநிலங்களைவிட ஒரு மாநிலத்திற்கு எதிர்பாராத அனுகூலம் ஏற்படலாம். மற்ற மாநிலங்களில் 1951-ம் ஆண்டுக்குப் பிறகு பல்வேறு நாட்களில் சாதகமான அளவிற்கு மக்கட் தொகை இருக்கலாம் என்றும் ; அடுத்து வரும் மக்கட்தொகை கணக்கெடுப்பின் தொடக்க நிலைப் புள்ளி விவரம், தமிழ் நாடு மக்சட் தொகையில் 20 சதவிகிதம் அதிகரிப்பைக் காட்டுகிறது. எனவே, இதை மீண்டும் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளுமுன் 1971-ம் ஆண்டு இறுதிப் புள்ளி விவரத்தை எதிர்பார்ப்பதென்றும் அவர்கள் காரணம் கூறியிருக்கிறார்கள்.

27th November 1970]

திரு. ஜி. சுவாமிநாதன் : அடுத்த தேர்தலைப் பொறுத்த வரையில், நம்முடைய குடும்ப நலத் திட்டத்தின் காரணமாக நமக்கு இடையூறு ஏற்படுமா என்பதையும் அப்படி ஏற்பட்டால், அதற்கு அரசு என்ன செய்ய யோசித்திருக்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்த 39-க்கும் குறையாது என்று கருதுகிறோம். அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டால், அப்போது ஆவன செய்வதற்கு அரசு முன்வரும்.

Theft of Idols

*2. *Q.*—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether it is a fact that a Judge of the High Court, Tamil Nadu has recommended to the Government to establish a Special Police Cell to prevent thefts of idols ; and

(**d**) if so, the action taken thereon ?

கடவுள் சிலைகள் களவு

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தெய்வச் சிலை திருட்டுக்களைத் தடுப்பதற்காக சிறப்புக் காவல் பிரிவு ஒன்றை அமைக்க அரசிடம் தமிழ் நாடு உயர்நீதி மன்ற நீதிபதி ஒருவர் பரிவுரை செய்துள்ளாரென்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன்பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) சென்னை உயர்நீதி மன்றம் கருத்து தெரிவித்ததற்கு முன்பாகவே அரசு இம்மாநிலத்தில் கடவுளர் சிலைகள் களவு போவதைத் தடுக்க முன்வந்துள்ளது. அரசு கடவுளர் சிலைகளின் களவுகளைப் புலனாய்வு செய்வதற்கென குற்றப்புலனாய்வுத் துறையின் குற்றப் பிரிவின் கூடுதல் பணியாளர்களை நியமிக்க ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இந்தத் தீர்ப்புக்கு முன்பாக எத்தனை பணியாளர்கள் இருந்தார்கள் ? தீர்ப்புக்குப் பிறகு எத்தனை பணியாளர்களை அதிகப்படுத்தியிருக்கிறோம் ? அவர்கள் என்னென்ன அதிகாரிகளாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தற்சமயம் இந்தப் பணிக்காக இரண்டு இன்ஸ்பெக்டர்கள், இரண்டு சப்-இன்ஸ்பெக்டர்கள், இரண்டு தலைமைக் காவலர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். எண்ணிக்கை விவரத்தைப் பொறுத்த வரையில், முதலில் இருந்தது எவ்வளவு, இப்போது இருப்பது எவ்வளவு என்ற விவரம் இல்லை.